



# Voice of Jagadguru




advaitam paramanandam

an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



எப்பொழுதும் தனக்கு நல்லதே நடக்க வேண்டும், நல்லதே கிடைக்க வேண்டும் என்று மனிதன் எண்ணுகிறான். அவன் அதுபோல் எண்ணுவது நியாயந்தான். அதற்காக அவன் பல செயல்களையும் செய்துகொண்டிருக்கிறான். அதன் பலன்களையும் ஜன்மஜன்மமாக அனுபவித்துக்கொண்டு வருகிறான் (ஞானம் வரும் வரை).

ஆனால் இக்காலத்தில், நல்ல செயல்களைச் செய்துகொண்டு வரும் தங்களுக்கு பலன் கிடைக்குமா என்று ஒரு சிலருக்கு ஸந்தேஹம் வருகிறது. நிச்சயமாகப் பலன் கிடைக்கும் என்று தான் சாஸ்த்ரம் கூறுகிறது. எந்தச் செயலுக்கும் அதற்கான பலன் உண்டு. நல்ல செயல்களுக்கு நல்ல பலனும், கெட்ட செயல்களுக்கு கெட்ட பலனும் உண்டாகும். இதில் ஸந்தேஹமே வேண்டாம். அதனால்தான், மனிதனின் நலனை உத்தேசித்து 'நல்ல செயல்களையே செய். உனக்கு இஹத்திலும் பரத்திலும் நல்ல பலனே கிடைக்கும்' என்று சாஸ்த்ரம் உபதேசிக்கிறது.

यथा धेनुराहस्रेषु वत्यो बिन्दति मातरम् ।
तथा पूर्वकृतं कर्म कर्तारमनुगच्छति ।।
யதா$^{2}$ தே$^{4}$னுராஹஸ்ரேஷு வத்யோ பி$^{3}$ந்த$^{3}$தி மாதரம் |
ததா$^{2}$ பூர்வக்ரு’தம்’ கர்ம கர்தாரமனுக$^{3}$ச்ச$^{2}$தி ||

அதாவது, ஆயிரம் பசுக்களுக்கு நடுவில் தன் தாய்ப் பசு போய்க்கொண்டிருந்தாலும் கன்றுக்குட்டி தன் அம்மாவைத் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கும். அதேபோல் ஒருவன் ஏற்கனவே செய்த செயல்கள் அவனைப் பின்தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆகையால், செயல்களுக்கான பலனும் நிச்சயமாகக் கிடைக்கும்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

कुशलान्याशु सिद्धयन्ति नेतराणि कृतानि यत् ।
குஶலான்யாஶு ஸித்³த⁴யந்தி நேதராணி க்ரு’தானி யத் .


சொல்லப் போனால் புண்யச் செயல்களுக்கு சீக்ரமாகவே பலன் கிடைக்கிறது. கெட்ட செயல்கள் மெதுவாகக் கெட்ட பலனைக் கொடுத்து அந்தச் செயல் செய்தவனை அழித்துவிடுகிறது. இதை நன்றாகப் புரிந்துகொண்டு நல்ல செயல்களையே செய்ய வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்




பகவானுடைய அனுக்ரஹத்தைச் சம்பாதிப்பதற்கு முக்கியமான ஸாதனம் பக்தி ஆகும். பக்தி இருந்துவிட்டால் பிறகு வேறெந்த யோக்யதையும் ஒருவனுக்குத் தேவையில்லை. மனிதனுக்கு, பக்தி என்பது மிகவும் அவசியம், பக்தி பல வகையாக சாஸ்திரங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. பகவத் கதைகளைக் கேட்பது, அவன் புகழ் பாடுவது, அவனை எப்போதும் நினைப்பது, அவனது பாதஸேவை செய்வது, பூஜிப்பது, வணங்குவது, தாஸ்ய பாவத்துடன் ஸேவை செய்வது, நட்போடு பழகுவது, இறுதியில் தன்னையே அர்ப்பணிப்பது ஆகிய இவையெல்லாம் பக்தியின் வகைகள். இவற்றில் எந்த விதமான பக்தியை நாம் வளர்த்துக் கொண்டாலும் அது நமக்கு சிரேயஸ்ஸையே தரும். நமக்கு எந்த விதமான பக்தியும் இல்லை என்றால் அத்தகைய வாழ்க்கை எதற்கும் பயனில்லாத வாழ்க்கை ஆகிவிடும். மனிதப் பிறவி என்பது கிடைப்பதற்கு துர்லபமானது என்று எல்லோருக்கும் தெரியும். நம்முடைய சென்ற பிறவியில் நாம் செய்த எண்ணற்ற புண்ணிய கர்மாக்களின் விளைவாகத்தான் இப்போது நமக்கு மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது. அப்படியிருக்கையில், இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருவனுக்கு இருந்தால், பக்தி போன்ற சாதனங்களை ஒருவன் கடைப்பிடித்தல் மிக அவசியமாகும்.



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

### காணாபத்யம்

**31.** துர்கா கணபதி



தப்தகாஞ்சந ஸங்காஸஸ்ச

அஷ்டஹஸ்தோ மஹத்தநு:

தீப்தாங்குஸம் ஸரஞ்சாக்ஷம்

தந்தம் தக்ஷேவஹந் கரை:


வாமே பாஸம் கார்முகஞ்சலதாம்

ஜம்பூத்யதத் கரை:

ரக்தாம்ஸூகஸ்ஸதா பூயாத்


துர்கா கணபதிர் முதே

உருக்கிய பொன் போன்ற திருமேனியும், எட்டு திருக்கரங்களுடன் பெரிய உருவமும் கொண்டு, ஜ்வலிக்கின்ற அங்குசத்தையும், அம்பு, அக்ஷமாலை, தந்தம் ஆகியவற்றை வலக்கரங்களிலும், பாசம், வளைந்த வில், கற்பகக் கொடி, நாவற்பழம் ஆகியவற்றை இடக்கரங்களிலும் ஏந்திய செந்நிற ஆடை உடுத்தியுள்ள துர்கா கணபதியைத் துதிக்கிறேன்.



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

**32.** ஸங்கடஹர கணபதி



பாலார்காருண காந்திர் வாமே பாலாம் வஹந் நங்கே

லஸதிந்தீவர ஹஸ்தாம் கௌராங்கீம் ரத்ந ஸோபாட்யாம்

தக்ஷேSங்குஸ வரதாநம் வாமே பாஸஞ்ச பாயஸ பாத்ரம்

நீலாம்ஸுகலஸமாந: பீடே பத்மாருணே திஷ்டந்

ஸங்கடஹரண: பாயாத் ஸங்கடபூகாத் கஜாநநோ நித்யம்

பால சூர்யன் போன்ற நிறத்துடன் கூடியவராக, நீல மலரைத் தாங்கியுள்ள பச்சை மேனியளான தேவி இடது தொடையில் அமர்ந்திருக்க, வரதம், அங்குசம் ஆகியவை வலக்கரங்களிலும், பாசம், பாயஸ பாத்ரம் ஆகியவை இடக்கரங்களிலும் தாங்கி, நீல நிற ஆடை அணிந்து, தாமரைப் பீடத்தில் நின்ற திருக்கோலத்துடன் கூடியவராகக் காட்சி தந்து, ஸங்கடத்தின் போது எப்போதும் தோன்றி அருளும் யானைமுகக் கடவுளைத் துதிக்கிறேன்.

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு



(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

ஸ்ரீ வித்யையின் ஶக்தி

ஸ்ரீ ஆதி ஶங்கரர் அறிவுறுத்திய அத்வைத கோட்பாட்டின்படி, மாயை அகற்றப்பட்டால் மட்டுமே ப்ரஹ்மத்தின் அறிவைப் பெற முடியும். (பல வகையான நடைமுறைகளைக் குறிப்பிடலாம் – இருள் எரிந்தவுடன் அல்லது அறிவு கிடைத்தவுடன் அறியாமை மற்றும் மாயை நீக்கப்படுவது போல). ஸ்ரீவித்யா நடைமுறையின் படி மாயை என்பது ப்ரஹ்மத்தின் ஶக்தி மட்டுமே. ப்ரஹ்மம் மாயையால் ஆத்மாவாகத் தெரிகின்றது. அறிவின் மூலம் மாயை நீக்கப் பட்டால் ஆன்மா ப்ரஹ்மமாக மாறும் என்று அத்வைதக் கொள்கை கூறுகின்றது. அடிப்படையில் ஆன்மாவும் ஶிவனும் ஒன்றேதான். இரட்சிப்பின் முடிவிலும் அது மீண்டும் ஒன்றேயாகும். இது ஶாக்தத்தில் குறிப்பாக ஸ்ரீவித்யா தந்திரங்களில் தெளிவாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் படைப்பு இருமை. இரட்சிப்பைப் பற்றி எந்த வித்தியாசமும் இல்லை. இது இரட்டை என்று தோன்றும் மாயை மட்டுமே என்பதை வெறுமனே புறக்கணிக்க வேண்டும். ஸ்ரீ தேவி இதை உருவாக்கியதாக ஶாக்தம் கூறுகின்றது. இந்த இருமை அனைத்தும் அந்த ஸ்ரீ தேவிக்குள் நுழைகின்றன. அவள் ஒரு விளையாட்டை விளையாடுகின்றாள். அவளை வணங்குவதன் மூலமும், ஜபிப்பதன் மூலமும் இந்த மாயையை வெல்ல முடியும். இந்த மாயையை வென்று மூல காரணத்துடன் ஒன்றிணைக்கவும். மீண்டும் அந்த ப்ரஹ்மத்துடன் ஒன்றிணைக்கவும், அதில் இந்த மூல காரணம் ஒன்றிணைந்துவிடும், ஒரு தனிப் பொருளாக.

ஸ்ரீவித்யா இருமை அல்லாத மற்றும் இருமைத் தன்மையை ஒன்றிணைக்கும் வேலையைச் செய்கின்றது. ஶிவன் (மிகவும் அமைதியானவர், இரண்டாவதாக தெரியாதவர்) மற்றும் ஶக்தி (இரட்டைக்கு காரணம்) பிரிக்க முடியாமல் ஒன்று படுகிறார்கள் என்று அது கூறுகின்றது.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

## 5. உத்தரதேச யாத்திரை



புனா ஸமீபம் வரையில் போனதில் தனக்கேற்பட்ட ஆசாரத்திற்கு வேண்டிய வசதிகள் மிகவும் குறைகிறதென்று தெரிந்து கொண்டு உத்தரதேச யாத்திரையை நிறுத்திக்கொண்டு சோலாப்பூர், பீஜப்பூர் மார்க்கமாகத் திரும்பிவிட்டார்கள். ஸொண்டூர் வழியாக பல்லாரிக்கு விஜயம் செய்தார்கள். அந்தக் காலத்தில் லிங்காயத்தார் ஆர்பாட்டம் ஜாஸ்தியாயிருந்தபடியால் ஏதேனும் கலவர மேற்படுமென்று ஜனங்களும் ஸர்க்காரும் எதிர்பார்த்து வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். ஆனால் இவர் தனக்கு ஏற்பட்ட பிருதாவளியுடன் பட்டணத்தில் பிரவேசித்தவுடனேயே இவரை தர்சனம் செய்த ஒவ்வொருவர் மனத்திலும் இவருடைய சாந்தமான ஸ்வபாவம் பிரதிபலித்து துவேஷபாவனை போனவிடம் தெரியாமல் எல்லாஜனங்களும் ஒரேவிதமாக ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள். அந்த ஊரிலேயே சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்து இரண்டு மாஸத்திற்குமேல் தங்கினார்கள். அங்கே மைசூர் திவான் ஸர் கே.சேஷாத்திரி அய்யர் வந்து ஸூத்ரபாஷ்ய சாந்தி செய்து கொண்டு விசேஷ அனுக்ரஹத்துடன் திரும்பினார்.

பல்லாரியிலிருந்து புறப்பட்டு பௌகுப்பே என்ற கிராமத்தில் வந்து இறங்கின ராத்திரியிலேயே இவர்கள் ஜாகையில் திருடர்கள் பிரவேசித்து ஸ்ரீ சந்திரமௌலீசுவரர், ரத்னகர்ப்ப கணபதி, இவைகள் வைத்திருந்த சின்ன தாமிரப் பெட்டி, சில ருத்ராக்ஷ கண்டிகள், வெள்ளிப் பாத்திரங்கள், வலமுறி சங்கம், ஸ்வர்ண கணபதி முதலிய பதார்த்தங்களை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். காலையில் இந்த ஸமாசாரம் ஸ்ரீஸ்வாமிகளவர்களின் காதில் விழுந்தவுடன், யாரிடமும் பேசாமல் ஸ்நாநம் செய்துவிட்டு ஈரவஸ்திரத்துடன் ஆஸனத்தில் அமர்ந்து நரஸிம்ஹ மந்திர ஜபம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். கிரமப்படி கலெக்டர் முதலான அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் பட்டது. ஆனால், மடத்தில் மேல் என்ன நடக்க வேண்டும், பூஜாதிகள் நடக்கவேண்டியது எப்படி, போஜனாதி வியவஹாரங்கள் நடப்பது எப்படி என்று யாரும் சொல்ல முடியாமல் பிரமித்து நின்றார்கள். யானை, குதிரை, மாடு, கன்று முதலான ஜந்துக்கள்கூட

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆஹாரம் எடுத்துக்கொள்ளாமல் நின்றன. ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் பீடத்தில் காலை 6-மணிக்கு உட்கார்ந்தவர் ராத்திரி 10-மணிக்குத் தானாகவே எழுந்து மறுபடியும் ஸ்நாநம் செய்து உட்கார்ந்துவிட்டார்கள். மூன்றாவது நாள் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் அனுக்ரஹம் பெற்று தேடிவருவதாகச் சென்றார். ஐந்தாவது தினம் மத்தியானம் 12-மணிக்கு மூன்று நான்கு மைல் தூரத்தில் ஒரு வயலில் உழும்போது ஒரு சிறிய தாமிரப்பெட்டி கிடைத்ததாக ஸமாசாரம் வந்து உடனே இன்ஸ்பெக்டர் போய் வாஸ்தவம்தான் என்று தெரிந்து மடத்திற்குச் சொல்லியனுப்பினார். அப்பொழுதுதான் மடத்திலுள்ள யாவருக்கும் போயிருந்த பிராணன் திரும்பிவந்தாற்போல் ஆயிற்று. உடனே ஸ்ரீமடத்திலிருந்து பல்லக்கு பிருதாவளிகளுடன் ஆபால விருத்தர் எல்லா ஜனங்களும் அந்த இடத்திற்கு ஓடினார்கள். வெய்யில் ஸஹிக்கமுடியாமல் இருந்தும் ஜனங்கள் லக்ஷியம் செய்யாமல் அந்த நான்கு மைல் தூரமும் நடந்து சென்றார்கள். அங்கே பெட்டியுடன் இன்ஸ்பெக்டர் நிற்கக் கண்டார்கள். திறந்து பார்த்ததில் ஸ்ரீ சந்திரமௌலீசுவரர், ரத்னகர்ப்ப கணபதி, வலமுறிசங்கம் இவைகள் மாத்திரம் இருந்தன. இவைகளை ஜனங்கள் பார்த்த க்ஷணமே எங்கிருந்தோ திடீரென்று மழை பெய்யவாரம்பித்தது. மழையிலேயே நனைந்துகொண்டு சுமார் 5-மணிக்கு ஸ்ரீமடம் வந்து சேர்ந்தார்கள். மடத்தில் பிரவேசித்த க்ஷணத்திலேயே மழையும் நின்று எல்லாருக்கும் ஆச்சர்யத்தை உண்டுபண்ணிற்று.

ஸ்ரீஸ்வாமிகள் ஸந்நிதியில் இப்பெட்டியை வைத்தவுடன் அவர்கள் கொஞ்சநேரம் பரவசமாய் ஸ்தம்பித்து கண்களில் தாரை தாரையாய் ஜலப்ரவாஹமேற்பட்டது. சில நிமிஷங்கள் சென்று அந்த இன்ஸ்பெக்டரைத் தன் ஸமீபத்தில் அழைத்து தன் அமிருதமயமான கரங்களால் ஆலிங்கனம் செய்து கொண்டு, தன் ஹஸ்தத்தை அவர் சிரஸில் வைத்து பரமானுக்ரஹம் செய்தார்கள். ஸீதையைக் கண்டுவிட்டு வந்த ஹனுமாருக்கும் ஸ்ரீராமசந்திரன் இவ்விதமேயல்லவா பரிஷ்வங்கம் என்கிற மஹத்தான ஸன்மானத்தைச் செய்தார்? சூர்யாஸ்தமன ஸமயமாகி விட்டபடியால் ஸ்ரீஸ்வாமிகள் ஸ்நாநம் செய்து அன்று ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் பூஜைக்கு உட்கார்ந்தவர் மறுநாள் விடியற்காலம் 6-மணிக்குத்தான் பூஜையை முடித்தார்கள்.

ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யாரவர்கள் காசியிலிருக்கும்போது விசுவேசுவரரே கைலாசத்திலிருந்து ஐந்து லிங்கங்கள் கொண்டுவந்து கொடுத்ததாகவும், அவைகளில் ஒன்றை சிதம்பர க்ஷேத்திரத்தில் வைத்துவிட்டு, மற்ற நான்கையும் தன்னால் நான்கு திக்குகளிலும் ஏற்படுத்தப்பட்ட சிருங்கேரி, துவாரகா, பதரீ, ஜகந்நாதம் என்று சொல்கிற சதுராம்னாய பீடங்கள் பூஜை செய்யும்படி தன் சிஷ்யர்களுக்கு ஆக்ஞை செய்ததாகவும் தெரிகிறது.


(தொடரும்…)



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita





ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ॥ श्रीगणेशपञ्चरत्नम् ॥
## ஸ்ரீகணேச பஞ்சரத்னம்

नितान्तकान्तदन्तकान्तिमन्तकान्तकात्मजं
अचिन्त्यरूपमन्तहीनमन्तरायकृन्तनम् ।
हृदन्तरे निरन्तरं वसन्तमेव योगिनां
तमेकदन्तमेव तं विचिन्तयामि सन्ततम् ॥ ५ ॥
நிதாந்தகாந்தத³ந்தகாந்திமந்தகாந்தகாத்மஜம்’
அசிந்த்யரூபமந்தஹீனமந்தராயக்ரு’ந்தனம் .
ஹ்ரு’த³ந்தரே நிரந்தரம்’ வஸந்தமேவ யோகி³னாம்’
தமேகத³ந்தமேவ தம்’ விசிந்தயாமி ஸந்ததம் .. 5 ..




ஒற்றைக்கொம்பரான கணேசரின் பற்கள் அழகும் ஒளியும் பொருந்தியவை. அவருக்கு அழிவு கிடையாது. நம் இடையூறுகளைப் போக்குவார். இவர் தந்தை யமனைக் காலால் உதைத்தவர். இவரை அண்டினால் மிருத்யு பயம் விலகும். மனத்தை அடக்காதவர் இவர் தத்வத்தை அறிய முடியாது. வெளி விஷயங்களில் போகவொட்டாமல் மனதைத் தடுத்து தியானிப்பவர்களின் ஹிருதயத்தில் எப்பொழுதும் வாஸம்செய்வார். (5)

महागणेशपञ्चरत्नमादरेण योऽन्वहं
प्रजल्पति प्रभातके हृदि स्मरन्गणेश्वरम् ।
अरोगतामदोषतां सुसाहितीं सुपुत्रतां
समाहितायुरष्टभूतिमभ्युपैति सोऽचिरात् ॥ ६ ॥
மஹாக³ணேஶபஞ்சரத்னமாத³ரேண யோ(அ)ன்வஹம்’
ப்ரஜல்பதி ப்ரபா⁴தகே ஹ்ரு’தி³ ஸ்மரன்க³ணேஶ்வரம் .
அரோக³தாமதோ³ஷதாம்’ ஸுஸாஹிதீம்’ ஸுபுத்ரதாம்’
ஸமாஹிதாயுரஷ்டபூ⁴திமப்⁴யுபைதி ஸோ(அ)சிராத் .. 6 ..

ஒவ்வொரு நாளும் காலையில் கணபதியை தியானித்துக் கொண்டு பக்தியுடன் இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு பிணியும் தோஷங்களும் விலகி நல்ல கவித்திறன், நல்ல பிள்ளைகள், நீண்ட ஆயுள், அஷ்டைசு வர்யங்கள் இவைகள் எல்லாம் விரைவில் கிடைக்கும். (6)


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## || श्री मीनाक्षी स्तोत्रम् ||

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்ரம்

(ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் உள்ள ஸ்தோத்திரம்.)



यस्याः प्रीत्यर्थमनिशं लास्यं कुर्वन् शिवो बभौ |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||5||

யஸ்யா꞉ ப்ரீத்யர்த²மநிஶம்’ லாஸ்யம்’ குர்வன் ஶிவோ ப³பௌ⁴ |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||5||

எந்த ஸ்ரீ அம்பாளின் ப்ரீதிக்காக ஸ்ரீ ஈஸ்வரனும் எப்பொழுதும் நர்த்தனம் செய்து கொண்டு விளங்குகிறாரோ அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

लक्ष्मी सरस्वती मुख्या यस्याः तेजः कणोद्भवाः |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||6||

லக்ஷ்மீ ஸரஸ்வதீ முக்²யா யஸ்யா꞉ தேஜ꞉ கணோத்³ப⁴வா꞉ |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||6||

ஸ்ரீ லக்ஷ்மீ, ஸரஸ்வதீ முதலியவர்கள், எந்த அம்பாளின் தேஜஸ்ஸின் திவிலையிலிருந்து உண்டானவர்களோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

या देवी मुक्तिकामानां ब्रह्म विद्या प्रदायिनी |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||7||

யா தே³வீ முக்திகாமானாம்’ ப்³ரஹ்ம வித்³யா ப்ரதா³யினீ |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||7||

எந்த அம்பாள் முக்தியை விரும்புகிறவர்களுக்கு பிரும்மவித்யையை உபதேசிக்கிறாளோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

यस्याः प्रणाम मात्रेण वर्धन्ते सर्व संपदः
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||8||

யஸ்யா꞉ ப்ரணாம மாத்ரேண வர்த⁴ந்தே ஸர்வ ஸம்பத³꞉
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||8||

எந்த அம்பாளை நமஸ்காரம் செய்வதாலேயே எல்லா ஸம்பத்துக்களும் வளர்கின்றனவோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம். (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஸ்ரீமந்நாராயணீயம்

### चतुर्थ दशकम्

நாலாவது தசகம் -அஷ்டாங்க யோகம்

ध्यायतां सकल मूर्तिमीदृशी - मुन्मिषन्मधुरता - हृतात्मनाम् ।
सान्द्र - मोदरस - रूपमान्तरं ब्रह्मरूपमयि तेऽवभासते ||6||
த்‘யாயதாம்’ ஸகல மூர்திமீத்³ரு’ஶீ- முன்மிஷன்மது‘ரதா - ஹ்ரு’தாத்மனாம் .
ஸாந்த்³ர - மோத³ரஸ - ரூபமாந்தரம்’ ப்³ரஹ்மரூபமயி தே(அ)வபா‘ஸதே ||6||



அன்பின் வடிவே! ஹே குருவாயூரப்பா ! உன்னை இப்படி எல்லா அவயவங்களையும் தியானிப் பவர்களுக்கு, அதன் இனிமையால் உள்ளம் கவரப்பட்டவர்களுக்கு, பரிபூர்ணமான ஆனந்தரஸரூபமாகிய பரப்ரம்ம ரூபம் மனதில் தானே பிரகாசிக்கிறது. (ஸமாதி)

तत्समास्वदन-रूपिणीं स्थितिं त्वत्समाधिमयि विश्वनायक ।
आश्रिताः पुनरतः परिच्युतावारभेमहि च धारणादिकम् ||7||
தத்ஸமாஸ்வத³ன-ரூபிணீம்’ ஸ்தி²திம்’ த்வத்ஸமாதி‘மயி விஶ்வநாயக |
ஆஶ்ரிதா꞉ புனரத꞉ பரிச்யுதாவாரபே‘மஹி ச தா‘ரணாதி³கம் ||7||

உலகநாயகா! ஹே குருவாயூரப்பா ! அந்த பிரம்மானுபவ வடிவான ஸ்திதியாகிற ஸமாதி நிலையை உம்மிடம் அடைந்த நாங்கள் அந்த ஸமாதியிலிருந்து நழுவுதல் ஏற்பட்டால் மறுபடியும் தாரணை முதலியவற்றைத் தொடங்குவோம். இது நிச்சயம்.

इत्थमभ्यसन - निर्भरोल्लसत् त्वत्परात्मसुख - कल्पितोत्सवाः ।
मुक्त - भक्त - कुल - मौलितां गताः संचरेम शुक - नारदादिवत् ||8||
இத்த²மப்‘யஸன - நிர்ப‘ரோல்லஸத் த்வத்பராத்மஸுக² - கல்பிதோத்ஸவா꞉ |
முக்த - ப‘க்த - குல - மௌலிதாம்’ க³தா꞉ ஸஞ்சரேம ஶுக - நாரதா³தி³வத் ||8||

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



ஹே குருவாயூரப்பா ! உன்னை நாங்கள் இப்படி அப்பியாஸம் செய்வதால் உம்முடைய பரப்ரம்ம ஸ்வரூபானுபவமாகிற உத்ஸவத்தில் திளைக்கின்றவர்களாகி ஜீவன் முக்தர்களான பக்தர்களில் தலைசிறந்தவர்களாகிய சுகர், நாரதர் முதலி யோரைப் போல் சஞ்சரிப்போமாக.

त्वत्समाधि विजये तु यः पुनर्मक्षु
मोक्षरसिकः क्रमेण वा ।
योगवश्य - मनिलं षडाश्रयैरुन्नयत्यज
सुषुम्नया शनैः ||9||

த்வத்ஸமாதி4 விஜயே து ய: புனர்மக்ஷு மோக்ஷரஸிக: க்ரமேண வா .
யோக3வஶ்ய - மனிலம்’ ஷடா3ஶ்ரயைருன்னயத்யஜ ஸுஷும்னயா ஶனை: ||9||

ஹே குருவாயூரப்பா ! பிறப்பற்ற ஈசா ! உம்மிடம் ஸமாதிஜயம் ஏற்பட்டபின் யோகியானவன் ஸத்யோ முக்தியையோ கிரமமுக்தியையோ விரும்பினால் பிராணவாயுவை ஸுஷும்னா நாடிவழியாக ஆறு ஆதாரங்களைக் கடந்து மெதுவாக மேலே கொண்டு போகிறான். இதில் எந்த மாற்றமும் இல்லை.

लिंगदेहमपि संत्यजन्नथो लीयते त्वयि परे निराग्रहः ।
ऊर्ध्वलोककुतुकी तु मूर्धतस्सार्धमेव करणैनिरीयते ||10||
லிங்க3தே3ஹமபி ஸந்த்யஜன்னதோ2 லீயதே த்வயி பரே நிராக்3ரஹ: .
ஊர்த்4வலோககுதுகீ து மூர்த4தஸ்ஸார்த4மேவ கரணைநிரீயதே ||10||

ஹே குருவாயூரப்பா ! ஸத்யோ முக்தியை விரும்பியவன் ஆறு ஆதாரங்களைக் கடந்த பின் லிங்க சரீரத்தையும் விட்டு பரமாத்மாவான உம்மிடம் லயித்து விடுகிறான். கிரம முக்தியை விரும்பியவன் உச்சியிலுள்ள பிரம்மரந்திரத்தின் வழியாக அகக்கரணங்களுடன் கிளம்புகிறான்.

(தொடரும்....)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||ஸிவபக்தி கல்பலதிகா||

ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள்

दौरात्म्यतो मम भवत्पददर्शनेच्छा-मन्तुस्तथापि तव सा भजनात्मिकेति ।

स्यादीशितुर्मयि दयैव दयामकार्षीः अश्मादिभिः प्रहृतवत्सु न किं विभो त्वम् ।।

தௌ³ராத்ம்யதோ மம ப⁴வத்பத³த³ர்ஶனேச்சா²-மந்துஸ்ததா²பி தவ ஸா ப⁴ஜனாத்மிகேதி |

ஸ்யாதீ³ஶிதுர்மயி த³யைவ த³யாமகார்ஷீ: அஶ்மாதி³பி⁴: ப்ரஹ்ருதவத்ஸு ந கிம்' விபோ⁴ த்வம் ||

சிவ பெருமானே! உமது திருவடிகளைக் காணும் விருப்பம் என்கிற பாபச்செயலால் என் உள்ளம் கேட்டிருந்தாலும், எனினும் அது உமது மஜனையால் தான் எல்லாவற்றையும் ஆள்கிற தங்கள் என்னிடத்தில் கிருபையாலேயே இருக்கலாம். நீ கல் முதலியவற்றால் உன்னை அடித்தவர்களிடமும் கூட கருணையை காட்டவில்லையா ? என்ன.

दुःखानलोदरनिपातनधूर्वहेष्वे-ष्वर्थाङ्गनासुतमुखेष्वनुराग आगः ।

स्यात्ते रुषे तव दयाळुतया त्वदान- त्याद्यैर्विभो तदवधूय बिभर्षि चास्मान् ।।

து³:கா²னலோத³ரனிபாதனதூ⁴ர்வஹேஷ்வே-ஷ்வர்தா²ங்க³னாஸுதமுகே²ஷ்வனுராக³ ஆக³: .

ஸ்யாத்தே ருஷே தவ த³யாளுதயா த்வதா³ன- த்யாத்³யைர்விபோ⁴ தத³வதூ⁴ய பி³ப⁴ர்ஷி சாஸ்மான் ..

சிவ பெருமானே ! பொருள் மனைவி (ஸ்த்ரீ), மகன் (மக்கள்) முதலியவர்கள் துன்பம், துக்கம் என்ற நெருப்பின் நடுவில் விழுவதில் முன் நிற்பவைகளாய் இருக்கும் போது, அவர்கள் பால் பற்று வைத்தல் என்ற பாபச் செயல் உமது கோபத்திற்கு தூண்டுகோலாகும் ஆகையால் கிருபை கூர்ந்து உங்களை வணங்குதல் முதலியவற்றை காரணமாக்கி அந்த தவறை புறக்கணித்து எங்களை தாங்குகிறீர்.

(தொடரும்…) Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்